கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

<u>அ.வ.எண்.1/2019</u>

நாள்.13.10.2025

பி.வா.சா.1 – அன்பரசி

க/பெ – சுயம்பு

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வாதி மயில்ராஜன் எனது ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் ஆறுமுக நாடார் ஆவார். எனது தாயார் பெயர் அமிர்தகனி ஆவார்.எனது தந்தை ஆறுமுக நாடார் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர்கள் தங்கவேல் நாடார், மற்றொரு பெரியப்பா பெயர் ஞாபகம் இல்லை, எனது அத்தை பெயர் பால்தங்கம் ஆவார்கள். எனது தந்தை ஆறுமுக நாடாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 பேர்கள் ஆவோம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் எனது வழக்கறிஞர் தயாரித்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2) வாதி மயில்ராஜனின் வீடு எனது வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5 வீடுகள் தள்ளி உள்ளது. வாதி பிறந்ததிலிருந்து, வாதியும் வாதியின் தாயார் சுப்பம்மாளும் மேற்படி வீட்டில்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சுப்பமாளுக்கு எங்கள் ஊர் தான் என்றால் சரிதான். எங்கள் குடும்பம் எங்கள் ஊரில் நிலங்கள் அதிகம் உள்ள வசதியான குடும்பம் என்றால் சரிதான். விவசாய நிலங்களில் என்னுடைய தாத்தாவின் காலத்திலிருந்தே விவசாயம் செய்து வருகிறார்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.10.13 17:44:01 +0530

என்றால் சரிதான். விவசாய நிலங்கள் எங்கள் வீட்டிற்கும் எங்கள் ஊருக்கு அருகிலும் உள்ளது என்றால் சரிதான்.

3) எனது தாத்தாவிற்கு 500 ஏக்கர் நிலம் இருக்குமா என்றால் அவ்வளவு இருக்காது, ஆனால் ஊருக்கு கிழக்கு பக்கம், மேற்கு பக்கம், வடக்கு பக்கம் என நிலங்கள் உள்ளது. எனது தாத்தாவின் காலத்தில் எனது தந்தை மேற்படி நிலங்களில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல, எனது தந்தை விவசாயம் செய்யவில்லை. எனது தாத்தா விவசாயம் செய்த காலத்தில் எனது தந்தை மற்றும் அவரது சகோதரர் எனது தாத்தாவிற்கு உதவியாக விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் எனது தந்தையின் சகோதரர் உதவியாக இருந்தார், எனது தந்தை உதவியாக இல்லை.

4) வாதி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ஒப்பந்தவேலை செய்து வருகிறார் வேறு விவரங்கள் எனக்கு தெரியாது. வாதியின் தாயார் சுப்பம்மாள் சார்ந்த மக்கள் விவசாய கூலி வேலைகள் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், என்ன பரிகாரம் என்றால் எனது தந்தையின் வாரிசு என விளம்புகை செய்யகேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது தந்தையின் பெற்றோர் பெயர் சுப்பையா நாடார் மற்றும் பத்திரகாளி அம்மாள் ஆகும். எனது தாயார் அமிர்தகனி இறந்து எவ்வளவு வருடம் ஆனது என்றால் 10 வருடங்கள் ஆகியுள்ளது.

5) என்னுடைய பெரியப்பா தங்கவேல் நாடார் அவர்களுக்கு வாதி வீடு



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.10.13 17:44:06 +0530

கட்டி கொடுத்தார் என்றால் பெரியப்பா அல்ல, பெரியப்பாவின் மகன் சமுத்திரபாண்டி என்பவருக்கு வீடு கட்டி கொடுத்தார். எனது சகோதரர் ஜெகன் என்பவருக்கும் வீடு கட்டுமான கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரர் ஜெகன் வீடு எங்கு உள்ளது என்றால் எங்கள் ஊரில் தான் உள்ளது. மேற்படி வீடு கட்டி கொடுப்பதில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக வாதிக்கும், தங்கவேல் நாடார் குமாரர் சமுத்திரபாண்டி என்பவருக்கும் எங்களுக்கும் எங்களுடைய மகன்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு பழவூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) மேற்படி குற்ற வழக்கானது வள்ளியூர் குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் எனது தந்தையின் புகைப்படம் உள்ளதா என்றால் உள்ளது. என் தந்தையின் புகைப்படத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். எங்கள் ஊரானது மொத்தம் 100 குடும்பங்களை கொண்ட சிறிய ஊர் என்றால் சரிதான், 100 வீடுகள் இருக்கும். எங்கள் ஊரில் குறைவான மக்கள் தொகை இருப்பதால் நாங்கள் அனைவரும் வேறுபாடுன்றி ஒன்றாக பேசி பழகியிருப்போம் என்றால் அனைவரும் பேசி கொள்வோம்.

7) எனது தந்தை எப்போது செட்டிகுளம் சௌந்தரபாண்டியன் என்பவரிடம் வேலைக்கு சென்றார் என்றால் எனக்கு நினைவிற்கு நாளில் வேலைக்கு சென்று வந்தார். எனது தாத்தாவிற்கு ஊரில் நிறைய விவசாய நிலம் இருக்கும் நிலையில் எதற்காக என் தந்தை செட்டிகுளம் சௌந்தரபாண்டியனிடம் வேலைக்கு சென்றார் என்றால் அது பற்றி



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.10.13 17:44:11 +0530

எனக்கு தெரியாது. நான் எனது தந்தை மற்றும் தாயரிடம் அது பற்றிய விவரம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்கள் குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.10.13 17:44:16 +0530